இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 07-08-2024

# பொய் வண்டி விடுகிறார்கள்

ரூ. 6 ஆயிரம் கோடியை தமிழ்நாட்டு ரயில்வே திட்டங்களுக்கு ஒதுக்கியதாகவும், ஏராளமான புதிய திட்டங்களைக் கொண்டு வந்துள்ளதாகவும் ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் சொல்லி இருக்கிறார். ஒரு காலத்தில் இதற்கு புகைவண்டி என்று பெயர். பா.ஜ.க. ஆட்சியில் பொய் வண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு எந்தப் புதிய திட்டமும் இல்லை. நிதிநிலை அறிக்கைக்கு முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்த நான்கு திட்டங்களில் எதற்குமே நிதி ஒதுக்கவில்லை. இதைப் பற்றிக் கேட்டதும், ரயில்வே துறையின் சார்பில் தமிழ்நாட்டுக்கு 6,362 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி சொல்லி இருக்கிறார். இது ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் 3.49 விழுக்காடு ஆகும். 9 விழுக்காட்டுக்கும் மேல் வருமானம் ஈட்டித் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு ரயில்வே துறையின் சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது இவ்வளவுதான்.

சட்டமன்றத் தேர்தல் வரப் போகும் மகாராஷ்டிராவுக்கு ரூ.15, 940 கோடியை ஒதுக்கி இருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்துக்கு 19,848 கோடி ரூபாயும், மத்திய பிரதேசத்துக்கு ரூ.14,738 கோடியும் ஒதுக்கி இருக்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் பீகார் மாநிலத்துக்கு ரூ.10,033 கோடியும், ஆந்திராவுக்கு ரூ.9,151 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இருந்தே பா.ஜ.க.வின் பாரபட்ச முகம் வெளிச்சத்துக்கு வந்து விடுகிறது.

தமிழ்நாட்டுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட ரயில்வே திட்டங்கள் என்ன, புதிய ரயில் பாதைகள் வரப்போகிறதா, நிறுத்தப்பட்ட ரயில்களை மீண்டும் இயக்கப் போகிறார்களா என்பதற்கான தகவல்கள் ஏதுமில்லை. "ரயில்வேயின் ஒவ்வொரு திட்டத்துக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் அடங்கிய 'பிங்க் புத்தகம்' இது வரை ஏன் வெளியிடப்படவில்லை?" என்று மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் கேட்டிருக்கிறார். அதற்கு என்ன பதில் வைத்திருக்கிறது பா.ஜ.க. அரசு?

**பா.ஜ.க. ஆட்சிக்கு முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் அறிவிக்கப்பட்ட பல்வேறு ரயில்வே திட்டங்களுக்கு பா.ஜ.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. திண்டிவனம் - செஞ்சி - திருவண்ணாமலை திட்டமானது 2006ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இன்னமும் முடியவில்லை. வேலூர் மாவட்டம் அத்திப்பட்டு - புத்தூர் ரயில் திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இன்னமும் ஒப்பந்தப் புள்ளியே கோரப்படவில்லை. திண்டிவனம் - நகரி திட்டம் பாதியில் நிற்கிறது. திருப்பெரும்புதூர் - கூடுவாஞ்சேரி திட்டம் 2012 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அது கிடப்பில் கிடக்கிறது. மாமல்லபுரம் - கடலூர் திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அப்படியே கிடக்கிறது. ஈரோடு - பழனி திட்டம் 2008 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதுவும் கிடப்பில் கிடக்கிறது. மதுரை - தூத்துக்குடி திட்டம் 2011 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்துக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி ரூ.350 கோடிதான். இதில் இருந்தே இவர்கள் எத்தனை பொய் வண்டிகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம்.**

ஏன் புதிய ரயில்வே திட்டங்களைக் கொண்டு வரவில்லை என்று கேட்டால், 'தமிழ்நாடு அரசு நிலங்களை கையகப்படுத்தி தரவில்லை' என்ற அடுத்த பொய்யை அவிழ்த்து விட்டுள்ளார் ரயில்வே அமைச்சர் அஸ்வினி. இதற்கு விரிவான அறிக்கையை தமிழ்நாடு வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வெளியிட்டு இருக்கிறார்.

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் இரயில்வே திட்டங்களுக்கு மொத்தமாக 2443 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய ஏற்கனவே தமிழ்நாடு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் வெளியிட்டு உள்ளார். தூத்துக்குடி - மதுரை (வழி - அருப்புக்கோட்டை) புதிய அகல ரயில்பாதை, திருவண்ணாமலை - திண்டிவனம் புதிய அகல ரயில்பாதை, ஈரோடு மாவட்டத்தில், கதிசக்தி பல்முனை மாதிரி சரக்கு முனையம் அமைக்க நிலம் - ஆகிய நிலங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மொத்த அளவு 1226.00 ஹெக்டேர் ஆகும். நிலத்தை கையகப்படுத்த வேண்டியது மாநில அரசின் பணி. அதைச் செய்து விட்டது தமிழ்நாடு அரசு. அதற்கான நிதியை வழங்க வேண்டியது ஒன்றிய அரசு. நில எடுப்புக்கு நிதி வழங்காததால்தான் நிலங்கள் அப்படியே கிடக்கின்றன. இதற்கு ரயில்வே அமைச்சரின் பதில் என்ன?**

ஒவ்வொரு திட்டத்துக்கும் 80 முதல் 100 விழுக்காடு வரை நிலங்கள் எடுத்து தமிழ்நாடு அரசு கொடுத்துவிட்டது. அவர்கள் பணம் கொடுத்து வாங்கவில்லை. இது யாருடைய தவறு?

தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களாக இருந்தால் அவை அனைத்துக்கும் அரசாணைகள் போடப்பட்டுள்ளது. ஒன்றிய பாதுகாப்புத் துறையின் கீழ், இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ் உள்ள நிலங்களை கையகப்படுத்த அந்தத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கைகள் வைத்து கடிதம் அனுப்பி உள்ளதே தவிர, அவர்கள் ஒப்புதல் வழங்காமல் வைத்துள்ளார்கள். இது யாருடைய தவறு?

**ஆட்சிக்கு வந்ததும் ரயில்வே துறைக்கான தனி நிதிநிலை அறிக்கையை ஒழித்தார்கள். ஆண்டுக்கு 12 கோடி மூத்த குடிமக்களுக்கு பலன் அளித்து வந்த சலுகைகளை ஒழித்தார்கள். இதுபோன்ற 'சாதனைகள்' தான் தொடர்கிறதே தவிர புதிய திட்டங்களும் இல்லை. வளர்ச்சியும் இல்லை. பொய் வண்டிகளை நிறுத்திவிட்டு, புதிய வண்டிகளை, பாதைகளை அமையுங்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.8.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூர் நேர்மை நகரில் 23 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தையின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கடலூர் மாவட்டம்

# குறிஞ்சிப்பாடி ஊராட்சியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

*கடலூர், ஆக.7 -*

*கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், தீர்த்தனகிரி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'மக்களுடன் முதல்வர்' ஊரகம் திட்ட முகாமினை வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் 5.8.2024, திங்கள் கிழமை, காலை 10 மணியளவில் தொடங்கி வைத்து, 405 பயனாளிகளுக்கு ரூ.7,13,66,150/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளையும் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அவ்வகையில் மகளிருக்கான விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம், முதல்வரின் முகவரி, களஆய்வில் முதலமைச்சர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி மக்களை தேடி அரசு அலுவலர்கள் சென்று மக்களின் குறைகளை போக்கும் வண்ணம் இந்த அரசு செயல்படுகிறது.*

*கடலூர் மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 683 ஊராட்சிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தின் கீழ் 11.07.2024 முதல் 30.08.2024 வரை 91 முகாம்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை 27 முகாம்கள் முடிவுபெற்றுள்ளது. இம்முகாம்களில் மொத்தம் 19,472 மனுக்கள் பதிவு செய்யப்பட்டு 5,193 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளது. மீதம் 14,279 மனுக்கள் நடவடிக்கையில் உள்ளது.*

*இம்முகாம்களில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சமூக நலத்துறை, சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை, மாவட்ட தொழில் மையம், தொழிலாளர் நலவாரியத்துறை. ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, மின்சாரம் (ம) பகிர்மானத்துறை, தாட்கோ, மகளிர் திட்டம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, மீன்வளத்துறை, இ-சேவை மையம் உள்ளிட்டவற்றை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். பொதுமக்கள் தங்களது முகாம் நடைபெறும் பகுதிகளுக்குச் சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன் பெறுமாறும் அறிவுறுத்தினார்.*

*அரசு, அரசு உதவி பெறும், பகுதியாக உதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் உள்ள 146 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9,631 மாணவிகள் மற்றும் 11,038 மாணவர்கள் என மொத்தம் 20,669 மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாண்டில் மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலை நோக்கு பார்வையுடன் கிராமப்புறங்களில் கடைக்கோடியில் இரத்தக்கொதிப்பு, சர்க்கரை நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை வீடுகளுக்கே சென்று பரிசோதித்து, கண்டறிந்து மருந்து மாத்திரைகளை வழங்கும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் இதுவரை 3.75 இலட்சம் பேர் ரத்தக்கொதிப்பு நோய், 2.3 இலட்சம் பேர் சர்க்கரை நோய் மற்றும் 2.05 இலட்சம் பேர் இரண்டும் பாதிக்கப்பட்டோர் என கண்டறியப்பட்டு தொடர் சிகிச்சை அளித்து சீரிய முறையில் செயல்படுத்துவதில் மாநில அளவில் கடலூர் மாவட்டம் இரண்டாம் இடத்தில் உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை சார்பில் 212 பயனாளிகளுக்கு ரூ.2,42,50,000/ மதிப்பீட்டில் இலவச மனைப் பட்டா, இபட்டா, பட்டா மாற்றம், புதிய குடும்ப அட்டை, சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் நிவாரணத் தொகை மற்றும் உதவி தொகைளும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.28,190/ மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கும், ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் ரூ.33,460/ மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூ.3,74,50,000/ மதிப்பீட்டில் 107 பயனாளிகளுக்கும், மகளிர் திட்டம் சார்பில் ரூ.67,10,000/ மதிப்பீட்டில் 8 பயனாளிகளுக்கும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் ரூ.12,60,000/ மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை சார்பில் ரூ.16,000/ மதிப்பீட்டில் 8 பயனாளிகளுக்கும், மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம் சார்பில் ரூ.1,500/ மதிப்பீட்டில் 3 பயனாளிகளுக்கும், வேளாண்மை-உழவர் நலத் துறை சார்பில் ரூ.1,01,000/ மதிப்பீட்டில் 6 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத் துறை சார்பில் ரூ.2,46,000/ மதிப்பீட்டில் 41 பயனாளிகளுக்கும், கூட்டுறவுத் துறை சார்பில் ரூ.12,70,000/ மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கும் என மொத்தம் 405 பயனாளிகளுக்கு ரூ.7,13,66,150/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.*

*தொடர்ந்து, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், அகரம் ஊராட்சி, தெற்கு பள்ளிநீரோடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்தார். மேலும், ஆதிநாராயணபுரம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாடக மேடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.*

*அதனை தொடர்ந்து, கடலூர் விருத்தாசலம் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணியினை குறிஞ்சிப்பாடி பகுதியில் பார்வையிட்டு ஆய்வுசெய்து, மேலும், அப்பகுதியில் மேம்பாலம் அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வடலூர் 4 முனை சந்திப்பு சாலை விரிவாக்க பணிகளை பார்வையிட்டு ஆய்வுசெய்து சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.*

*வடலூர் நகராட்சி அலுவலக கூட்டரங்கில் நெடுஞ்சாலை துறை மற்றும் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊரக வளர்ச்சி அலுவலர்களுடன் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.*

*நெடுஞ்சாலை துறை மூலம் மேற்கொள்ளப்படும் சாலை விரிவாக்க பணிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து வளர்ச்சித் திட்ட பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் இரா.சரண்யா, மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆர்.நாராயணசாமி, ஆர். ராயர் டி.காசிராஜன், மாநகரச் செயலாளர் கே.எஸ். ராஜா, வடலூர் நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், துணை தலைவர் சுப்புராயலு, பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணைத் தலைவர் ஆர். ராமர், வடலூர் நகரச் செயலாளர் த.தமிழ்ச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து துறை அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*




கடலூர் மாவட்டம் – வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 'மக்களுடன் முதல்வர்' ஊரகம் திட்ட முகாமினை கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், தீர்த்தனகிரி அரசு மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்து, பள்ளி மாணவ – மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.